செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.08.2020

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : யூலை 2020

### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### நிதி அமைச்சு

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk

2020 யூலை மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 6.1% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2020 யூன் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 6.3% ஆக இருந்தது. 2020 யூலை மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 5.6%, 0.5% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 2.2% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2019 யூலை மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே -1.1%, 3.4% ஆக காணப்பட்டன. 2019 யூலை மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2020 யூலை மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக தேங்காய், அரிசி, தேங்காய் எண்ணெய், மஞ்சள்தூள், புதிய மீன் மற்றும் சீனி ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

2020 யூலை மாதத்திற்கான சகல பொருட்களுக்குமான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) 137.3 ஆக காணப்பட்டது. இது, சுட்டெண் 137.3 ஆக இருந்த 2020 யூன் மாதத்துடன் ஒப்பிடுகையில், சுட்டெண் புள்ளிகளிலோ அல்லது சதவீதத்திலோ எவ்வித மாற்றத்தையும் காட்டவில்லை. உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.15% ஆல் குறைவடைந்தமை மற்றும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.15% ஆல் அதிகரித்தமை என்பன மாதம் மீது மாத மாற்றத்திற்கு பங்களிப்பு வழங்கின.

உணவுப்பொருட்களின் விலைக் குறைவுகள் மரக்கறி, சின்ன வெங்காயம், எலுமிச்சம்பழம், அரிசி, வெள்ளைப்பூடு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், கருவாடு, தேங்காய், சீனி, ஈரப்பலா, மைசூர் பருப்பு, மிளகாய்த்தூள், மிளகு, கறித்தூள் மற்றும் கடலை என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த விலைகள் உருளைக்கிழங்கு, புதிய பழங்கள், மஞ்சள்தூள், பச்சை மிளகாய், விசுக்கோத்து, முட்டை, புதிய மீன், கோழி இறைச்சி, அரிசி மா, பப்படம் மற்றும் நூடில்ஸ் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 யூலை மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புகளுக்கு காரணம், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை & தியக்க மருந்துகள்’(பாக்கு), ‘ஆடையும் காலணியும்’, ‘சுகாதாரம்’(தனியார் வைத்தியசாலை அறை கட்டணங்களுக்கான கொடுப்பனவு) மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். எனினும், ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ பிரிவு பொருட்டு விலைக் குறைவு பதிவாகியது. மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், ‘போக்குவரத்து’ பிரிவு பொருட்டு சற்று விலை அதிகரிப்பு பதிவாகியதுடன் ‘தளபாடம், குடித்தன உபகரணம் & வழமையான குடித்தன பராமரிப்பு’ பிரிவு பொருட்டு சற்று விலைக் குறைவு பதிவாகியது. அதேநேரம், ‘வீடமைப்பு,நீர்,மின்வலு,எரிவாயு,ஏனைய எரிபொருள்கள்’, ‘தொடர்பாடல்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் விலைச் சுட்டெண்கள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.

2020 யூலை மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2020 யூன் மாதத்தில் பதிவாகிய 4.4% இருந்து 4.5% வரை அதிகரித்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க % | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு (முதன்மை) | தே.நு.வி.சு (மையம்) |
| 2019 | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 |
| | ஒகஸ்ட் | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 |
| | செப்ரெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 |
| | ஒக்ரோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 |
| | நவம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 |
| | டிசம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 |
| 2020 | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |
| | பெப்ரவரி | 137.0 | 135.8 | 0.0 | 0.4 | 8.1 | 3.4 |
| | மார்ச் | 135.2 | 136.0 | -1.3 | 0.1 | 7.0 | 3.2 |
| | ஏப்ரல் | 134.8 | 136.9 | -0.3 | 0.7 | 5.9 | 3.2 |
| | மே | 135.4 | 137.9 | 0.4 | 0.7 | 5.2 | 3.7 |
| | யூன் | 137.3 | 138.9 | 1.4 | 0.7 | 6.3 | 4.4 |
| | யூலை | 137.3 | 139.4 | 0.0 | 0.4 | 6.1 | 4.5 |